<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| அ.வ.எண். | 60/2017 | சாட்சி | வா.சா.1 |
|---|---|---|---|
| பெயர் | மணி | நாள் | 16.11.2022 |
| தகப்பனார் பெயர் | இராமசாமி கவுண்டர் | | |

**<u>1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை:-</u>**

1) நான் என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், என்னுடைய சொத்தின் பேரில் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

2) வழக்குரையில் உள்ள சொத்து விவரத்தில் நான் என்ன சர்வே எண் குறிப்பிட்டுள்ளேன் என்றால், சர்வே எண்.277/6A ல் உள்ள நிலம் தொடர்பாக குறிப்பிட்டுள்ளேன். மேற்படி சர்வே எண்ணில் உள்ள நிலத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால், 15 செண்ட்கள் ஆகும்.

3) தாவா சொத்திற்கு மேற்கிலும், வடக்கிலும், தெற்கிலும் எங்கள் குடும்பத்திற்கு சொந்தமான சொத்தும், தாவா சொத்திற்கு கிழக்கு புறம் அருந்ததியர் மயானத்திற்கு போகும் பாதை உள்ளது. மேற்படி பாதை அதற்கு முன்பாக தென்வடல் கொடிக்காலாக இருந்தது.

4) 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளுக்கும், எங்கள் குடும்பத்திற்கும் இந்நீதிமன்றத்தில் மொத்தம் எத்தனை வழக்குகள் உள்ளது என்றால், இவ்வழக்கு இல்லாமல் 2 வழக்குகள் உள்ளது. அ.வ.எண்.49/2010 மற்றொன்று மேல்முறையீட்டு வழக்கு எண்.16/2022 ஆகும்.

5) தற்போது நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கின் வழக்குரையில் மேற்படி 2 வழக்குகள் பற்றி நான் குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. குறிப்பிட்டுள்ளேன். இவ்வழக்கில் கடந்த 24.03.2017 ம் தேதியில் இ.ம.எண்.283/2017 ன் படி எங்களுக்கு சாதகமாக இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

6) இந்நிலையில் கடந்த 29.04.2017 ம் தேதியில் இ.ம.எண்.283/2017 ன் படி எனக்கு சாதகமாக வழங்கப்பட்ட மேற்படி இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் இந்நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்டு எனக்கு ரூ.1000/- அபராதமாக விதிக்கப்பட்டு மேற்படி அபராத தொகையை மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடங்கப்பட்டுள்ள கணக்கில் 1 வார காலத்திற்குள் செலுத்த உத்தரவிடப்பட்டும் நான் இதுவரை செலுத்தவில்லை என்றால், சரியல்ல. நான் செலுத்தியுள்ளேன்.

7) மேற்படி அபராதம் செலுத்தியதற்கான ரசீது ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். மேற்படி இடைக்கால உறுத்துக்கட்டளை ரத்து செய்யப்பட்டதற்கு எதிராக நான் மேல்முறையீடு எதுவும் இதுவரை செய்துள்ளேனா என்றால், செய்யவில்லை.

( 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.